**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் &மேலாளர் மற்றும் ஆணையர் (பொ) திருமதி வே. விஜயாஸ்ரீ அவர்களால் 31.05.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **29**.05.2019

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) அரசாணை (நிலை) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.4) துறை நாள் 19.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் 20.08.2018–இல் தெரிவித்துள்ளவாறு உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி பொது சீராய்வு 2018 மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, குடியிருப்பு கட்டிடங்களுக்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் சொத்துவரியை 50%–க்கு மிகாமல் உயர்த்தவும், குடியிருப்பு உபயோகம் அல்லாத கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலை உபயோக கட்டிடங்களுக்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் சொத்துவரியில் 100%–க்கு மிகாமல் வரியை உயர்வு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள நாமக்கல் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு எண். 30 நாள் 11.11.2018–இல் பிரசுரம் செய்யப்பட்டு சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டு வரிவிதிப்பாளர்களுக்கு சிறப்பு அறிவிப்புகள் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இராசிபுரம் நகராட்சியில் மொத்தம் 17009 வரிவிதிப்புகளுக்கு சிறப்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுக்கப்பட்டு அஞ்சல் அலுவலகம் மூலம் வரிவிதிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டது. சிறப்பு அறிவிப்பு 1 எண்ணிக்கை அனுப்பி வைக்க ரூ. 5.70 செலவாகிறது. அதன்படி 13354 எண்ணிக்கை சிறப்பு அறிவிப்புகள் அஞ்சல் துறை மூலம் அனுப்பி வைக்க மொத்தம் ரூ. 76118/– ஆகும் செலவிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) சொத்துவரி சீராய்வு சிறப்பு அறிவிப்புகள் வரிவிதிப்பாளர்களிடம் சென்று அடைய வேண்டி உள்ளதால் வரி வசூல் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்படி பணியை அஞ்சல் துறை மூலம் மேற்கொண்டதையும், அதற்கான தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(அ1/1907/18)

**தீர்மானம் எண். 542**

அனுமதிக்கப்பட்டது

( 2 ) இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளர் பணியிடம் – 1, தட்டச்சர் – 1, வருவாய் உதவியாளர் – 1 மற்றும் தங்கும் விடுதி காவலர் – 1 ஆகிய பணியிடங்களை 01.10.2010 முதல் 30.09.2011 வரை தற்காலிகமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். 49748/2010/எச்1 நாள் 04.11.2010–இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 01.10.2011 முதல் 30.09.2019 வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு 1.10.2019 முதல் 30.09.2020 வரை பணி நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், மேற்படி பணியிடங்கள்

நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் தற்காலிகப் பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால், **01.10.2011** முதல் **30.09.2019** வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு **1.10.2019** முதல் **30.09.2020** வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும் மேற்படி பணியிடங்கள் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/1086/19)**

**தீர்மானம் எண். 543**

அனுமதிக்கப்பட்டது

**(3)** இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒரு பணியிடம் ஆகிய தற்காலிகப் பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண். **6568/09**/எப்**3** நாள் **27.08.2014**–இல் **1.10.2014** முதல் **30.9.15** வரை பணி நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் மேற்படி தற்காலிகப் பணியிடங்கள் **1.10.2015** முதல் **30.09.2019** வரை பின்னேற்பும், **1.10.2019** முதல் **30.09.2020** வரை ஓராண்டிற்கு பணி நீடிப்பு அனுமதியும் மேற்படி பணியிடம் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி குடிநீர் பணிகளுக்கு அவசியம் தேவைப்படும் பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒன்று ஆகிய தற்காலிகப் பணியிடங்களை **1.10.2015** முதல் **30.09.2019** வரை பின்னேற்பும், **1.10.2019** முதல் **30.09.2020** வரை மேலும் ஓராண்டிற்கு நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/1087/19)**

**தீர்மானம் எண். 544**

அனுமதிக்கப்பட்டது

**(4)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு லாரி ஓட்டுநர் தற்காலிகப் பணியிடம் ஒன்றினை **01.10.2010** முதல் **30.09.2011** வரை ஓராண்டிற்கு நீடித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். **8269/2010**/ஜே**3** நாள் **22.11.2010**–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சிக்கு ஓட்டுநர் பணியிடம் தேவையாக உள்ளது. மேற்படி ஓட்டுநர் பணியிடத்தை 01.10.2011 முதல் 30.09.2019 வரை பின்னேற்பும், மேலும் ஓராண்டிற்கு 1.10.2019 முதல் 30.09.2020 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும், தொடர்ந்து நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி 01.10.2011 முதல் லாரி ஓட்டுநர் பணியிடத்தை 30.09.2019 வரை பின்னேற்பும், 1.10.2019 முதல் 30.09.2020 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், ஓட்டுநர் பணியிடத்தை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1088/19)

**தீர்மானம் எண். 545**

அனுமதிக்கப்பட்டது

(5) இந்நகராட்சி பொதுப் பிரிவில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் தேர்தல் பணிக்காக Sharp Xerox Machine Developer Unit வாங்கியதற்கான தொகை ரூ. 19500/–ற்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனம் | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Spyder Technology | Sharp Xerox Machine Developer Unit | ரூ. 16526/– |
| | | SGST | 1487/– |
| | | CGST | 1487/– |
| | | **Total :-** | **19500/–** |

**அலுவலகக்குறிப்பு :** 1) தேர்தல் பணிக்காக அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(அ2/637/18)

**தீர்மானம் எண். 546**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் சமுதாய கழிப்பிடங்கள்– 14 மற்றும் நகராட்சி / அரசு பள்ளிகளில் 10 கழிப்பிடங்களை " சுபம் கங்கா சேவா சன்ஸ்தான் " என்ற நிறுவனத்தின் மூலமாக சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் பராமரிப்புக் காலம் 25.04.2019–ஆம் தேதியுடன் ஓராண்டு முடிவடைவதால், மேற்படி கழிப்பிடங்களை அவசியம் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய காரணத்தால் ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. 5000/– வீதம் மேலும் மூன்று மாதங்களுக்கு 26.04.2019 முதல் 31.07.2019 வரை மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அ) பொது சுகாதார அத்தியாவசியத்தை கருதியும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், பராமரிப்பு செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) 14 சமுதாய கழிப்பிடங்களுக்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், 10 நகராட்சி / அரசு பள்ளிகளுக்கு கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/535/18)

**தீர்மானம் எண். 547**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளான வீடு தோறும் அபேட் மருந்து ஊற்றுதல், மழைநீர் தேக்கமுள்ள கண்டெய்னர்களை அகற்றும் பணிகளை செய்ய DBC பணியாளர்கள் 50 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் 16451 வீடுகளுக்கு மொத்தம் 60 DBC பணியாளர்களை 02.05.2019 முதல் தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தவும், ரெயின்போ மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பாபாஜி மகளிர் சுய உதவிக்குழு மூலமாக DBC பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ. 160/– வீதம் ஊதியம் வழங்கவும், மேலும், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி கூடுதலான DBC பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 9/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று டெங்கு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவும், மேற்காண் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1550/18)

**தீர்மானம் எண். 548**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளான வீடு தோறும் அபேட் மருந்து ஊற்றுதல், மழைநீர் தேக்கமுள்ள கண்டெய்னர்களை அகற்றும் பணிகளை செய்ய DBC பணியாளர்கள் 50 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் 16451 வீடுகளுக்கு ரெயின்போ மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பாபாஜி மகளிர் சுய உதவிக்குழு அமைத்தும் மேற்படி இரு சுய உதவிக்குழுக்கள் மூலமாக DBC பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ. 160/– வீதம் வழங்கப்பட்டதற்கு ரூ. 9/– இலட்சத்திற்கு மன்ற தீர்மானம் எண். 358 நாள் 6.7.2018–இல் அனுமதி பெறப்பட்டுள்ளது. கூடுதலாக மேற்கண்ட செலவினம் ரூ. 153600/–ற்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி மன்ற முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்ட செலவினம் ரூ. 153600/— கூடுதலாக மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி எதிர்நோக்கி மன்ற முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1550/18)

**தீர்மானம் எண். 549**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

( 9 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 12.7.2007 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள் 21.9.2009—இன்படி, புதியதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் முந்தைய ஆண்டின் தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்த்தி வசூல் செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளதால், இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும்போது சாலை பராமரிப்புக் கட்டணம் கீழ்க்கண்டவாறு 5 சதவீதம் 1.4.2019 முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | சாலை விவரம் | 1.4.2018 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 1.4.2019 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | கருங்கல் ஜல்லி சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>30.90 மீட்டர் நீளத்திற்கு | <br>1635/—<br>2650/— | <br>1717/—<br>2783/— |
| 2 | தார் சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>30.90 மீட்டர் நீளத்திற்கு | <br>3500/—<br>4435/— | <br>3675/—<br>4657/— |
| 3 | சிமெண்ட் சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>30.90 மீட்டர் நீளத்திற்கு | <br>4040/—<br>4980/— | <br>4242/—<br>5229/— |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 1.4.2019 முதல் சாலை பராமரிப்புக் கட்டணம் உயர்வு செய்த வசூல் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/840/19)

**தீர்மானம் எண். 550**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

( 10 ) இந்நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 19 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 13.2.2019—இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, இந்நகராட்சியில் BPL கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல், கணக்கெடுப்பு படிவங்களை கள ஆய்வு மேற்கொள்ளுதல், மேற்படி படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்தல், அதற்குத் தேவையான அதிவேக பைப்பர் பிராட்பேண்ட் இணைப்பு பெறுதல், எழுது பொருட்கள் வாங்குதல் மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கு ரூ. 150000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினங்களை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(எச்1/251/19)

**தீர்மானம் எண். 551**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(11) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 1 முதல் 13 முடியவுள்ள பகுதியில் TURIF 2018–இன்கீழ் தார்சாலை அமைக்கும் பணி நடைபெறுவதால் அவ்வழியாக வரும் பகிர்மானக் குழாய் கசிவு சரிசெய்யவும் இணைக்கும் பணி மற்றும் சுலீஸ் வால்வுகளில் லீக் மற்றும் செக்நட் பழுது நீக்கம் செய்யும் பணி மற்றும் வார்டு எண்.2 தேரடி தெரு வழியாக 150mm AC லைனிலிருந்து நகர வங்கித் தெருதுவிற்கு செல்லும் பகிர்மானக் குழாய் இணைக்கும் பணி உப்பு நீர் குழாய் valve பழுது நீக்கம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 180000/– ஆகும். தற்போது மக்களாட்சித் தேர்தல் அறிவிப்பால் பணியின் அவசர அவசியத்தைக் கருதி மேற்காணும் பணிகளை சரிசெய்ய ரூ. 180000/–ஐ நகராட்சிகளின் 1920–ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15–இன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தகவலை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/881/19)

**தீர்மானம் எண். 552**

பதிவு செய்யப்பட்டது

(12) இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட் பகுதியிலுள்ள கடைகளுக்கு 9 ஆண்டுகள் முடிவுற்றபடியால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கண்காணிப்புக் குழுவின் மூலமாக 2016–2017–ஆம் ஆண்டுகளில் 1.7.2016 முதல் வாடகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து W.P.16718 முதல் 16734 மற்றும் 16736 முதல் 16750/2017 வரை வழக்குகள் சென்னை, உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் மேற்கண்ட வழக்குகள் நகராட்சிக்கு சாதகமாக கடந்த 7.12.2017 தேதியன்று தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. 2016–17 நிலுவை மற்றும் நடப்பு வரையில் குத்தகை உரிமம் வாடகை செலுத்தாமல் நிலுவையில் உள்ளதால் தினசரி மார்க்கெட் கடைகள் மற்றும் பழைய பேருந்து நிலைய கடைகளுக்கு வாடகை வசூலிப்பது தொடர்பாக 14.5.19 தேதியன்று சென்னை, உயர்நீதி மன்ற வழக்கறிஞர் ஸ்ரீநிவாஸ் அவர்களின் சட்டக் கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேற்காணும் சட்டக் கருத்துருவிற்கு ரூ. 3000/– வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/3097/17)

**தீர்மானம் எண். 553**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனம் TN 28 A 0778 வாகனத்தின்செல்ப் மோட்டார் பழுது நீக்கம் செய்த வகையில் ரூ. 4275/—ஐ ஓட்டுநர் திரு சு. வடிவேல் அவர்களால் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை ஓட்டுநர் திரு சு. வடிவேல் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, ரூ. 4275/—ஐ ஓட்டுநர் திரு சு. வடிவேல் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/1276/19)

**தீர்மானம் எண். 554**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சியால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். 13264/2006 மற்றும் 33415 / 2006 ஆகியவைகள் முடிக்கப்பட்டு 20.07.2018—இல் தீர்ப்பாணை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்குகள் நடத்தியதற்கான தொகை ரூ. 10000/— வழக்கறிஞர் திரு பி.பி. சண்முகசுந்தரம் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வழக்கு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வழக்கு செலவினம் ரூ. 10000/— வழக்கு கட்டணம் திரு பி.பி. சண்முகசுந்தரம், வழக்கறிஞர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/7091/11)**

**தீர்மானம் எண். 555**

அனுமதிக்கப்பட்டது

( 15 ) சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை எண். 33264/2006 மற்றும் 33415/2006—இன் தீர்ப்பாணை நாள் 20.07.2018—இல், சேலம் தொழிலாளர் நீதி மன்ற வழக்கு எண். ஐடி 594/1992 நாள் 8.12.2003 தீர்ப்பாணைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், நகராட்சிக்கு எதிராக தீர்ப்பாணை வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கினை மேல் முறையீடு செய்ய சட்டக் கருத்துரு, திரு பி.எஸ். சிவசண்முகசுந்தரம், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களிடம் கோரி பெறப்பட்டுள்ளது. அதற்கான கட்டணம் ரூ. 7500/— வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** சட்ட கருத்துரு வழங்கியதற்கான தொகை ரூ. 7500/— நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/7091/11)**

**தீர்மானம் எண். 556**

அனுமதிக்கப்பட்டது

(16) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306(28A) மற்றும் 2019–ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–இன்கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன இராசிபுரம் நகராட்சியில் தடை செய்யப்பட்டு அதற்கென கீழ்க்கண்டவாறு தண்டனைகள் மற்றும் அபராதத் தொகை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையாக குற்றத்திற்கான பணத் தண்டம் ரூ. | 2–ஆம் முறையாக குற்றத்திற்கான பணத் தண்டம் ரூ. | 3–ஆம் முறையாக குற்றத்திற்கான பணத் தண்டம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 25000/– | 50000/– | 100000/– |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 10000/– | 15000/– | 20000/– |
| 3 | மளிகைக் கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 1000/– | 2000/– | 5000/– |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 100/– | 200/– | 500/– |

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் தண்டனைகள் மற்றும் அபராத தொகையினை நாமக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடவும், தினசரி செய்திகளில் விளம்பரம் செய்வதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/747/19)

**தீர்மானம் எண். 557**

அனுமதிக்கப்பட்டது

( 17 ) இராசிபுரம் நகராட்சிக்கு எடப்பாடி–இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீரை பாதுகாப்பான முறையில் பொது மக்களுக்கு வழங்குவதற்கு சோடியம் ஹைபோ குளோரைடு (Sodium Hypo Chloride) திரவம் கலந்து விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் 2019–2020–ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ. 600000/–ற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

(இ2/1251/19)

**தீர்மானம் எண். 558**

அனுமதிக்கப்பட்டது

( 18 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 Q 8402–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து இயக்க அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4000/–த்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்வதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/749/19)

**தீர்மானம் எண். 559**

அனுமதிக்கப்பட்டது

( 19 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான நெசவாளர் காலனி சமுதாய கூடத்தில் மின் விளக்குகள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதால், அவற்றை மாற்றி, பழுதுபார்த்து பராமரிப்பு மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 100000/–த்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிகளை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1408/19)

**தீர்மானம் எண். 560**

அனுமதிக்கப்பட்டது

( 20 ) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடம் அருகில் வாரசந்தையின் சுற்றுச்சுவா் இடிந்து விழுந்து விட்டதாகவும் இதனை சாி செய்து மாற்றி புதியதாக கேட் அமைத்து தர வாரசந்தை ஒப்பந்ததாரா் கோாியுள்ளாா். இதனை அமைத்து மற்றும் மிதி வண்டி நிறுத்தம் அருகிலுள்ள கடைகளுக்கு மின் விளக்கு வசதியும் மேலும் பெண்கள் பொது சிறுநீா் கழிப்பிடத்திற்கு தண்ணீா் வசதியும் செய்ய தயாா் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 250000/—யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 250000/—யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1406/19)

**தீா்மானம் எண். 561**

அனுமதிக்கப்பட்டது

( 21 ) இந்நகராட்சியால் பராமாிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகள், அலுவலக கட்டிடம், மேல்நிலை நீா்த்தேக்க தொட்டிகள், வாா்டு அலுவலகங்கள், பஸ் நிலையம், இலவச கழிப்பிடங்கள் ஆகியவற்றிலுள்ள விளக்குகளை பராமாிப்பு செய்ய 2019—2020—ஆம் ஆண்டிற்குத் தேவையான மின்பொருட்கள் கொள்முதல் செய்ய அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 400000/—த்திற்கு வருவாய் நிதியில் செலவு செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணியிற்கான செலவினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1251/19)

**தீா்மானம் எண். 562**

அனுமதிக்கப்பட்டது

( 22 ) இந்நகராட்சிக்குட்பட்ட செம்மலை தெரு மற்றும் வெங்கிடுசாமி தெரு பகுதிகளுக்கு குடிநீா் விநியோகம் செய்யப்படும் பகிா்மானக் குழாய் 63 mm PVC பைப் பதிக்கப்பட்டுள்ளதால், சீராக குடிநீா் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, 50 மீட்டா் தூரத்திற்கு 90 mm PVC பகிா்மான குழாய் அமைத்து சீராக குடிநீா் விநியோகம் செய்ய அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 26000/—/—த்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/818/19)

**தீா்மானம் எண். 563**

அனுமதிக்கப்பட்டது

( 23 ) இந்நகராட்சிப் பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் நீா்முழ்கி மின் மோட்டாா்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சாி செய்து பொது மக்களுக்கு

தண்ணீர் விநியோகம் செய்வதற்கு 2019–2020–ஆம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 600000/–/–ற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/1248/19)**

**தீர்மானம் எண். 564**

அனுமதிக்கப்பட்டது

(24) இந்நகராட்சி வார்டு எண். 23–இல் உள்ள மாதா கோவில் தெரு (குட்டான்குட்டை ரோடு, சுண்ணாம்பு சூளை) பகுதிக்கு, அத்தெருவில் உள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. மேற்படி ஆழ்துளைக் கிணற்றில் நீர் மட்டம் குறைந்து வருவதால் தண்ணீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால், புதிய பேருந்து நிலையம் மூலக்கிணற்றிலிருந்து ஆடு அடிக்கும் தொட்டிக்குச் செல்லும் லைனிலிருந்து மேற்காணும் பகுதிக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 30000/–த்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.

**(இ2/548/19)**

**தீர்மானம் எண். 565**

அனுமதிக்கப்பட்டது

(25) இந்நகராட்சிப் பகுதியிலுள்ள 27 வார்டுகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து கைப்பம்புகள் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்டவாறு அமைந்துள்ள 7 இடங்களில் ஆழ்துளைக் கிணறுகளின் கைப்பம்புகளின் பிளாட்பாரம் முழுவதும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது.

| | |
|---|---|
| வார்டு எண். 9 – | அம்மன் நகர் |
| வார்டு எண். 9 – | அதிசிந்தா கல்யாண மண்டபம் எதிரில் |
| வார்டு எண். 11 – | வி. நகர் ரோடு எண். 11, TVS தெரு |
| வார்டு எண். 6 – | நல்லப்பா தெரு |
| வார்டு எண். 9 – | மன்னார் காடு |
| வார்டு எண். 6 – | புது தெரு |
| வார்டு எண். 2 – | வள்ளலார் கோவில் அருகில் |

மேற்கண்டவாறு பழுதடைந்துள்ள கைப்பம்புகளுக்கு கான்கிரீட் பிளாட்பாரம் அமைத்து பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்து தரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50000/–ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/1249/19)**

**தீர்மானம் எண். 566**

அனுமதிக்கப்பட்டது

( 26 ) இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகிர்மானக் குழாய் கசிவு, பிரதான குழாயில் ஏற்படும் கசிவு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படும் குழாய்களில் ஏற்படும் கசிவுகள் சரி செய்யும் பணிகளை 2019–2020–ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 900000/–/–த்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1250/19)

**தீர்மானம் எண். 567**

அனுமதிக்கப்பட்டது

( 27) இந்நகராட்சி வார்டு எண். 23–இல் உள்ள தட்டான்குட்டை தெரு, மாதாகோவில் தெரு மற்றும் நகர சுத்தி தொழிலாளர் காலனி பகுதிகளுக்கு புதிய பேருந்து நிலைய மேல்நிலைத் தொட்டியிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலை வழியாக தண்ணீர் விநியோகம் செய்யப்படும் 110 mm PVC பகிர்மானக் குழாய்கள் பழுதடைந்து தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலையிலுள்ளதால், புதிய பேருந்து நிலைய மேல்நிலைத் தொட்டியிலிருந்து உழவர் சந்தை வழியாக புதியதாக பகிர்மானக் குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 200000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

(இ2/1407/19)

**தீர்மானம் எண். 568**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– வே. விஜயாஸ்ரீ
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்(பொ)
இராசிபுரம் நகராட்சி.